அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

43 | T | I

இரண்டாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020
Second Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : .....

கிறிஸ்தவம் I
Christianity I

காலம் : 2 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 தொடக்கம் 50 வரையான சகல வினாக்களுக்கும் I, II, III, IV, V என்கிற விடைகளிலிருந்து சரியான விடையினை தெரிவு செய்க.**

1. யாக்கோபு தம் எதிர்காலம் தொடர்பான இறை திட்டத்தை விளங்கிக் கொண்ட இடம்,
   1) எப்ரோன் 2) பெத்தேல் 3) பெயர்செபா 4) கானான் 5) பலஸ்தீனா

2. முதன்மையான இறைவாக்கினராக அறிமுகப்படுத்தப்படுபவர்,
   1) எசாயா 2) எசேக்கியேல் 3) மோசே 4) ஆமோஸ் 5) எரேமியா

3. "மாரா" என்ற எபிரேய சொல்லின் பொருள்,
   1) இனிமை 2) இறைபராமரிப்பு 3) நீர் 4) இறைவல்லமை 5) கசப்பு

4. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் தூதுப் பணியில் காணப்பட்ட விசேட பண்புகளில் ஒன்று,
   1) நூல்களை எழுதுதல் 2) தியானத்தில் ஈடுபடல் 3) தனித்து செயற்படல்
   4) மடல்களை எழுதுதல் 5) நாடு காண் பயணங்களை மேற்கொள்ளல்

5. 'இம்மானுவேல்" என்ற பெயரின் பொருள்,
   1) ஆண்டவர் நம்மு?டன் 2) கடவுளே மீட்பர் 3) இறை பிரசன்னம்
   4) கன்னி கருவுற்று ஒரு ஆண் மகனை பெற்றெடுப்பாள் 5) மீட்பராகிய யேசு கிறிஸ்து

6. இறைவாக்கினர் எசாயா நூலில் காணப்படும் அதிகாரங்கள்
   1) 58 அதிகாரங்கள் 2) 76 அதிகாரங்கள் 3) 86 அதிகாரங்கள்
   4) 74 அதிகாரங்கள் 5) 66 அதிகாரங்கள்

7. சமூக நீதியின் இறைவாக்கினர் என அழைக்கப்படுவர்
   1) இறைவாக்கினர் எரேமியா 2) இறைவாக்கினர் எசாமா 3) இறைவாக்கினர் ஆமோஸ்
   4) இறைவாக்கினர் மீக்கா 5) இறைவாக்கினர் நாத்தான்

8. புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக எழுதப்பட்ட நூல்
   1) மத்தேயு நற்செய்தி 2) மாற்கு நற்செய்தி 3) லூக்கா நற்செய்தி
   4) யோவான் நற்செய்தி 5) திருத்தூதர் பணி நூல்

9. லூக்காஸ் நற்செய்தி எழுதப்பட்ட காலப்பகுதி,
   1) கி.பி. 64 – 66 2) கி.பி.80 – 90 3) கி.பி. 80 – 85
   4) கி.பி. 90 – 100 5) கி.பி. 80 – 90

10. பவுல் கற்றுக் கொண்ட கைத்தொழில்
   1) மட் பாண்ட தொழில் 2) காற்துடைப்பான் தைக்கும் கைத்தொழில்
   3) கூடாரக் கைத்தொழில் 4) விவசாயம்
   5) நூல் நூற்றல்

11. திருச்சபையின் முதலாவது மறை சாட்சி,
1) புனித ஸ்தோவான் 2) புனித யாக்கோபு 3) புனித பேதுரு
4) புனித பவுல் 5) புனித அருளப்பர்

12. பவுலுக்கு மீண்டும் பார்வை பெற்றுக் கொடுத்தவர்,
1) பேதுரு 2) பர்ணபா 3) அகுஸ்தினார் 4) அன்னியா 5) கமாலியேல்

13. பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் பங்கு பற்றியவர்,
1) லூக்கா 2) சீலா 3) திமோத்தேயு 4) பர்சபர் 5) பர்ணடா

14. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரை நலம் பெறச் செய்ததால் பவுலுக்கும் பர்னாவுக்கு தெய்வங்கள் என்ற கௌரவம் வழங்கிய மக்கள்,
1) லிஸ்திரா மக்கள் 2) தெருபை மக்கள் 3) இக்கோனியா மக்கள்
4) அந்தியோக்கிய மக்கள் 5) பெருகை மக்கள்

15. எருசலேம் பொது சங்கத்தின் தலைவராக செயல்பட்டவர்,
1) புனித பவுல் 2) புனித பேதுரு 3) புனித யாக்கோபு
4) புனித யோவான் 5) புனித லூக்கா

16. எருவலேம் பொது சங்க தீர்மாணங்கள் அடங்கிய திருமுகங்களை கொண்டு செல்ல தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒருவர்,
1) புனித பேதுரு 2) பர்சபர் எனப்பட்ட யூதாஸ் 3) புனித லூக்கா
4) புனித ஸ்தேவான் 5) புனித யாக்கோபு

17. தூய ஆவியாரின் வல்லமையால் பவுல் செய்த வல்லமையான புதுமையாக கருதப்படுவது,
1) பேய்களை ஓட்டியமை 2) நோயாளரை குணப்படுத்தியமை
3) நற்செய்தியை போதித்தமை 4) மழை பெய்ய செய்தமை
5) யுக்திக்கு என்னும் இளைஞனை உயிர்பித்தமை

18. திருவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் காட்டப்படுகின்ற ஒழுங்கு முறையின் படி பவுல் எழுதிய 5ஆவது திருமுகம் எழுதப்பட்டது,
1) கொரிந்திருக்கு 2) பிலமோனுக்கு 3) பிலிப்பியருக்கு
4) எபேசியருக்கு 5) திமோத்தேயுவுக்கு

19. பவுலின் மரணத்தின் பின் எழுதப்பட்ட திருமுகம்,
1) தீத்து 2) கலாத்தியர் 3) பிலமோன் 4) உரோமையர் 5) பிலிப்பியர்

20. கிறிஸ்துவுக்குள் எந்த வித பேதமும் இல்லை எல்லோரும் சமமானவர்கள் என்ற படிப்பினையை கூறும் திருமுகம்,
1) பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம் 2) கொலோசையருக்கு எழுதிய திருமுகம்
3) கலாத்தியருக்கு எழுதிய திருமுகம் 4) தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
5) நிமோற்றேயுவுக்கு எழுதிய திருமுகம்

21. காலங்காலமாக யூத மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மீட்பர் இயேசுவே என்பதை எடுத்துக் காட்டும் நற்செய்தி,
1) மாற்கு நற்செய்தி 2) மத்தேயு நற்செய்தி 3) லூக்கா நற்செய்தி
4) யோவான் நற்செய்தி 5) திருத்தூதர் பணி

22. நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்ஏனெனில்.....
1) அவர்கள் கடவுளை காணபர் 2) அவர்கள் ஆறுதல் பெறுவர்
3) அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர் 4) ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது
5) ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்

23. இறையாட்சியை விளக்குவதற்கு யேசு கூறிய உவமைகளில் ஒன்று,
1) ஊதாரிப்பிள்ளை 2) களைகள் பற்றிய உவமை
3) நல்ல சமாரியன் உவமை 4) காணாமல் போன ஆடு பற்றிய உவமை
5) பரிசேயனும் ஆயக்காரனும் பற்றிய உவமை

24. ‘கெத்சமனி’’ என்ற எபிரேய சொல்லின் பொருள்,
1) ஒலிவ தோட்டம் 2) எண்ணெய் தொழிற்சாலை 3) பழத்தோப்பு
4) எண்ணெய் இயந்திரம் 5) மக்கள் வாழிடம்

25. யேசுவின் மரணத்தின் போது திருக்கோவிலின் திரை இரண்டாக கிழிதல் அடையாளப் படுத்தப்படுவது,
1) இறை வல்லமையை 2) இறை விருப்பத்தை
3) இறைவனிடம் செல்லும் வழி இயேசுவால் திறக்கப்பட்டுள்ளதை 4) திரை தரமற்ற?து என்பதனை
5) பாவத்தின் தன்மை

26. மூவொரு இறைவனின் பிரசன்னம் வெளிப்படும் சந்தர்ப்பம் ஒன்று,
1) இயேசுவின் திருமுழுக்கு 2) இயேசுவின் பிறப்பு 3) இயேசுவின் பாடுகள்
4) இயேசுவின் விணணேற்றம் 5) இயேசுவின் போதனை

27. திருமுழுக்கு பெறும் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்மா தைலத்தால் அபிசேகம் செய்யப்படுவது,
1) இயேசுவின் பணியால்னாக 2) குருவாக, இறைவாக்கினராக, அரசராக
3) இயேசுவின் தூதனாக 4) ஆசிரியராக
5) மறை போத பணியாலாக

28. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் இறைவனுக்கும், மனிதனுக்கும் இடையில் தனித்துவமான இடைநிலையாளராக செயல்படுபவர்,
1) தூய ஆவியானவர் 2) இறைவன் 3) இறைவாக்கினர் 4) கிறிஸ்து 5) அரசர்

29. ‘தசை என்ற சொல் மறைமுகமாக பொருட்படுத்தப்படுவது,
1) திருப்பிலியை 2) திருச்சபையை 3) திருவிவிலியத்தை
4) நற்கருணை நாதனர் 5) இறைவனை

30. ‘உங்கள் பலி தூய பலியாக இருப்பதற்கு முதலில் நீங்கள் ஒப்புரவின் பின்னர் ஒன்று கூடி அப்பத்தைப் பிட்டு நன்றி கூறுங்கள்’ என எடுத்துக் கூறும் நூல்,
1) திருவிலியம் 2) திருத்தூதர் பணி 3) டிடாக்கே
4) ஐந்நூல் 5) நற்செய்தி நூல்

31. திருச்சபையின் ஆரம்பத்தையும் புதியதொரு யுகத்தின் ஆரம்பத்தையும் எடுத்து காட்டுவது,
1) தூய ஆவியானவரின் வருகை 2) கிறிஸ்து பிறப்பு 3) திருத்தூதரின் அழைப்பு
4) கிறிஸ்துவின் பாடுகள் 5) ஆபிரகாமின் உடன்படிக்கை

32. கிறிஸ்துவே யூத மக்கள் எதிர்பார்த்த மெசியா என்பதை தைரியமாக எடுத்துக் கூறியவர்,
1) தூய பவுல் 2) தூய யோவான் 3) தூய லூக்கா 4) தூய பர்னபா 5) தூய பேதுரு

33. கிறிஸ்தவர்களுக்கு எதிராக துன்புறுத்தல்களை ஆரம்பித்த முதலாவது உரோமைப் பேரரசன்
1) பேரரசன் தொமீசியன் 2) பேரரசன் நீரோ 3) பேரரசன் திராஜனின்
4) பேரரசன் மாற்குஸ் 5) பேரரசன் தேசியுஸ்

34. பேரரசன் தொமீசியன் காலத்தில் பத்மூ தீவுக்கு நாடு கடத்தப்பட்ட திருத்தூதர்,
1) புனித பவுல் 2) புனித தேரு 3) புனித யாக்கோபு 4) புனித யோவான் 5) புனித லூக்கா

35. ‘‘கிறிஸ்வத பக்தர்களாக இருப்பது தண்டணைக்க உரிய குற்றிம் னக் கருதிய அரசன்,
1) பேரரசன் நீரோ 2) பேரரசன் திராஜன் 3) பேரரசன் வலேரியன்
4) பேரரசன் மாக்சிமியன் 5) பேரரசன் செப்திமுஸ்

36. பேரரசன் தியோக்கிளிசியன் காலத்தில் வேதசாட்சிகளானவர்கள்,
1) தூய பவுல் - தூய பேதுரு 2) புனித லோரன்ஸ், புனித லவுரேஞ்சியார்
3) புனித அகத்தம்மாள், புனித பபியன் 4) புனித செபஸ்தியார், புனித லூசியா
5) புனித அலேகசாந்தர், புனித சிசிலியா

37. கலாபனை காலத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர்,
1) பேரரசன் கொன்ஸ்தாந்தின் 2) பேரரசன் நீரோ 3) பேரரசன் திராஜன்
4) பேரரசன் வலேரியன் 5) பேரரசன் தியோக்கிளிசியன்

38. திருச்சபையின் மறை மாமேதையாக அழைக்கப்பட்டவர்,
1) பசில் 2) பெரிய கிரகோரியா 3) 8வது பொனிபஸ்
4) அத்தனாசியார் 5) ஜோன் கிறிசோஸ்தம்

39. தர்க்க வியலாளர்களிடையே மிகவும் திறமை உள்ளரென ஏற்றுக் கொளளப்பட்டவர்,
1) புனித பொனிபஸ் 2) புனித அத்தனாசியார் 3) புனித பவுல்
4) 8வது பொனிபஸ் 5) புனித ஜஸ்டின்

40. மரபுரீதியான நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுபவர்,
1) புனித ஜெரோம் 2) புனித அத்தனாசியார் 3) புனித ஜஸ்டீன்
4) புனித பவுல் 5) புனித 2ம் அருளப்பர் சின்னப்பர்

41. "மறை சாட்சிகளின் இரத்தம் கிறிஸ்தவர்களை உருவாக்கும் வித்தாகும்" என கூறியவர்,
1) தேர்த்தூலியன் 2) ஒரிஜன' 3) புனித அகுஸ்தினார் 4) புனித சிறில் 5) புனித ஜெரோம்

42. திருச்சபைக்கு மறை சுதந்திரம் கிடைத்தது,
1) எபேசு திருச்சங்கத்தினால்
2) எருசலேம் பொது சங்கத்தினால்
3) கல்செதோன் திருச்சங்கத்தினால்
4) கொன்ஸ்சாந்தினால் மிலான் அரச சாசனத்தைப் பிரகடனம் செய்த பின்
5) வேத கலாபனை காலத்தில்

43. புனித அகுஸ்தினார் எழுதிய அதிசிறந்த நூலாக சித்தரிக்கப்படும் நூல்
1) மனிதனும் கடவுளும் 2) கடவுளின் படைப்பு 3) இறைவனின் நகரம்
4) படைப்பின் மென்மை 5) உலக சமாதானம்

44. 12ம் நூற்றாண்டில் பலஸ்தீனத்திலுள்ள கார்மேல் மலையில் ஆரம்பமான சபை,
1) வின்சென்சியன் சபை 2) இயேசு சபை 3) கப்புச்சின் சபை
4) பொதுச் சபை 5) கார்மேல் சபை

45. 16ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றி துறவற சபைகளின் முக்கியமான சபை,
1) கப்புச்சின் சபை 2) பிரான்சிஸ்கன் சபை 3) இயேசு சபை
4) திரிதெந்தின் பொதுச்சபை 5) வின்சென்சியன் சபை

46. பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட முதல் சபை
1) கப்புச்சின் சபை 2) திரிதெந்தின் பொதுச் சங்கம் 3) இயேசு சபை
4) வின்சென்சியன் சபை 5) கார்மேல் சபை

47. "குவாத்திர ஜெசிமோ ஆனோ" என்ற திருமலை எழுதியவர்,
1) திருத்தந்தை 13ம் சிங்கராயர் 2) திருத்தந்தை 11ம் பத்தினாதர் 3) 23ம் அருளப்பர்
4) திருத்தந்தை 12ம் பத்தினாதர் 5) திருத்தந்தை 10ம் பத்தினாதர்

48. திருத்தந்தை 23ம் அருளப்பர் எழுதிய சுற்று மடல்
1) கிறிஸ்துவின் மறை உடல் 2) றேரும் நோவாறும் 3) அன்னையும் ஆசிரியையும்
4) டிவிகோ அவிலான்றோ ஸ்பிரிற்று 5) குவாத்திர ஜெசிமோ ஆனோ

49. ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலம்,
1) கி.பி. 1505க்கு பின் 2) கி.பி. 1505 – 1658 3) கி.பி.1796-1948
4) கி.பி. 1658-1796 5) கி.பி. 1648 – 1796

50. போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் ஒப்புக் கொடுத்தவர்,
1) தூய மக்ஸிமிலியன் கோல்பே 2) மைக்கல் றொட்றிகோ அடிகள்
3) புனித யோசேவாஸ் அடிகள் 4) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்
5) விசென்ற் அடிகளார்

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education NWP

43 | T | II

இரண்டாம் தவணைப் பரீட்சை – தரம் 13 – 2020

Second Term Test - Grade 13 - 2020

சுட்டெண் : .....

கிறிஸ்தவம் II
Christianity II

காலம் : 3 மணி

- **பகுதி I இலிருந்து 2 வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து 3 வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

பகுதி - I

1) 1) இஸ்ராயேல் இறைவாக்கினரின் பிரதான இரு பிரிவுகளை தருக.

2) சிறிய இறைவாக்கினர்களின் பெயர்கள் 8 தருக.

3) இறைவாக்கினர்களின் பிரதான மூன்று படிப்பினைகளை கூறி, சுருக்கமாக விளக்குக.

4) நவீன வேத கலாபனை காலத்தில் கத்தோலிக்க மாணவராகிய நீர் ஒரு இறைவாக்கினராக எவ்வாறு செயல்படுவீர் என்பதை ஐந்து காரணங்களை முன்வைத்து, விளக்குக.

2) 1) பழைய ஏற்பாட்டு ஞான இலக்கியங்கள் நான்கின் பெயர்களை தருக.

2) எபிரேய ஞானத்தின் பிரிவுகளை தருக.

3) திருப்பாடல்களின் வகைகள் 6 குறிப்பிட்டு, அவை பாடப்படும் சந்தர்ப்பங்களை தருக.

4) தூய ஆவியானவரிடம் ஞானம் என்ற கொடையினை உம்மேல் பொழிய செய்து, உம் வாழ்வை வளப்படுத்தும் படி வேண்டி செபம் ஒன்று எழுதுக. செபத்தின் பண்புகள் வெளிப்படும் வகையில் 100 சொற்களுக்கு குறையாமல் எழுதுக.

3) 1) நான்கு நற்செய்திகளின் பெயர்களையும் அவற்றின் அடையாளங்களையும் தருக.

2) நான்கு நற்செய்திகளின் நோக்கங்களை தருக.

3) சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை 3, வேற்றுமை3 கூறி உதாரணத்துடன் விளக்குக.

4) கிறிஸ்தவ மாணவன் என்ற ரீதியில் நீரும் ஒரு நற்செய்தியாளராய் எவ்வாறு செயற்படுவீர் 4 காரணங்களை முன்வைத்து, விளக்குக.

பகுதி – II

4) 1) பவுலின் மூன்று தூதுரைப் பயணங்களின் நோக்கங்களையும் எருசலேம் பொதுச் சங்கம் கூடி எடுத்த இறுதித் தீர்மானங்களையும் தருக.

2) பவுல் சவால்களுக்கு முகம் கொடுத்து தைரியத்தோடு தம் தூதுரைப் பணிகளை முன்னெடுத்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை கூறி, விளககி அதனூடாக நீர் எவ்வாறு உமது வாழ்வில் வரும் சவால்களுக்கு முகம் கொடுத்து என்பதை விளக்குக.

5) 1) பவுலின் திருமுகங்களில் காணக்கூடிய பண்புகளை தருக. (10 விடயங்களை முன்வைத்தல் வேண்டும்)

2) பவுலின் வாழ்வில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய அவற்றை எவ்வாறு உமது வாழ்வில் செயற்படுத்துவீர் என்பதை கூறி விளக்குக.

6) 1) யேசு செய்த அரும் செயல்களின் வகைகளை கூறி அவற்றுக்கு இவ்விரண்டு உதாரணங்கள் வீதம் கூறி விளக்குக.

2) இன்று யேசு உமது வாழ்வில் செய்யும் அரும் செயல்களை கூறி, விளக்குக. (5 விடயங்கள் விளக்கப்பட வேண்டும்)

7) 1) குடும்ப வாழ்வில் நல்லுறவு பற்றி புனித பவுல் எபேசியருக்கு கூறிய அறிவுரைகள் ஐந்தை கூறி, விளக்குக.

2) கிறிஸ்தவ குடும்பம் திருச்சபையின் உயிர் நாடி என்பதற்கு இணங்க பிள்ளைச் செல்வங்களாகிய நீங்கள் குடும்ப ஒற்றுமையை நல்லுறவை நிலைநாட்ட மேறகொள்ளும் நடவடிக்கைகள் ஐந்தை கூறி, விளக்குக.

8) 1) ஆரம்ப காலத் திருச்சபையின் பண்புகளை கூறி விளக்குக.

2) திருச்சபையின் படிப்பனைகளை கொண்டு, நீர் எவ்வாறு செயல்படுவீர் என்பதை ஐந்து காரணங்களை முன்வைத்து விளக்குக.

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2020

கிறிஸ்தவம் - 13 தரம் - Christianity

பகுதி - I விடைகள்

வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல	வினா இல	விடை இல
1	2	11	1	21	2	31	1	41	1
2	3	12	4	22	4	32	5	42	4
3	5	13	5	23	2	33	2	43	3
4	2	14	1	24	4	34	4	44	5
5	1	15	3	25	3	35	2	45	1
6	5	16	2	26	1	36	4	46	4
7	3	17	5	27	2	37	1	47	2
8	2	18	4	28	4	38	3	48	3
9	3	19	1	29	4	39	5	49	4
10	3	20	3	30	3	40	2	50	5

பகுதி – I

1) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 69
   2) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 70
   3) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 70
   4) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

2) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 84
   2) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 84
   3) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 85
   4) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

3) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 103
   2) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 104,106,109
   3) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 116,117
   4) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

பகுதி – II

4) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 123,126,127,131
   2) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக..

5) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 136
   2) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

6) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 154,155
   2) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

7) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 161
   2) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

8) 1) ஆசிரியர் வழிகாட்டி - பக்கம் 12
   2) பொருத்தமான விடைக்ளு புள்ளி இடுக.

NWP-EXAM